செய்தி வெளியீடு எண்: 463 நாள்: 22.09.2016

பத்திரிக்கை செய்தி

ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகளும், சட்டதிட்டங்களும் பற்றிய தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் பயிற்சி

-----

1. தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை, ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகள், சட்டதிட்டங்கள் பற்றிய 3 நாள் பயிற்சியினை வரும் அக்டோபர் 5 முதல் அக்டோபர் 7 வரை நடத்தவுள்ளது.

2. இப்பயிற்சிக்கான கட்டணம் ரூ.4,000/—ஆகும்.

3. உலகமயமாக்களின் விளைவாக, ஏற்றுமதி வர்த்தகத்திற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இப்பயிற்சியில் ஏற்றுமதி சந்தையின் தேவை, கொள்முதலுக்ககான வாய்ப்புக்கள், பொருளை பதப்படுத்துதல், சீரிய முறையில் பேக்கிங் செய்தல், அரசின் சட்டதிட்டங்கள், வங்கி நடைமுறைகள், அந்நிய செலாவனியின் மாற்றுவிகிதங்கள், காப்பீடு குறித்த தகவல்கள், பொருளை இறக்குமதி செய்பவரின் பின்னனி, அவர் நாட்டின் பொருளாதார நிலை போன்ற தகவல்கள் பயிற்றுவிக்கப்படும், மேலும், இப்பயிற்சியில் நிதி உதவிகள் பற்றிய ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விவாதிக்கப்படும்.

4. 18 வயது நிரம்பிய 10ம் வகுப்பு முடித்த ஆண்/ பெண் இருபாலரும் சேரலாம். இப்பயிற்சியை மேற்கொள்ள விரும்புவோர் ரூ.4000/– கட்டணமாக செலுத்தி தங்கள் பெயரை தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளலாம். இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள்.

| | |
|---|---|
| பயிற்சி நடைபெறும் இடம் | தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் கிண்டி சிட்கோ தொழிற்பேட்டை பார்த்தசாரதி கோயில் தெரு ஈக்காட்டுத்தாங்கல் சென்னை –600032. |
| தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி / கைபேசி எண்கள்<br>இனையதள முகவரி | 044–22252081 / 22252082<br>7550003363 / 7550009898<br>www,editn,in |

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**